DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE III, TRICHIRAPPALLI.

Present : Thiru. K.R.Balaji B.A,B.L.(Hons)

Judicial Magistrate III, Tiruchirappalli..

STC.No6780/2022

Deposition of witness for PW.4

Name : அருண்குமார்

Father /Wife of : பொன்னுசாமி

Village :

Taluk :

Caste :

Calling : காவல் உதவி ஆய்வாளர்

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 27.10.2022

<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>

1. நான் தற்போது மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புகாரைப் பெற்று வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரார் கணேசமூர்த்தி என்பவருடன் பணிபுரிந்து வருவதால் அவரின் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சையமாகும். உதவி ஆய்வாளர் கணேஷமூர்த்தி மருத்துவ விடுப்பில் இருப்பதால் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 19.10.2021ம் தேதி மாலை 05.00 மணிக்கு மண்ணச்சநல்லூர் வட்டம், நொச்சியம் சுந்தர் நகரை சேர்ந்த பாலசுப்ரமணியன் மகன் அ.சா.1 செந்தில் (எ) கார்த்திகேயன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் மனு ரசீது 837/2021 கொடுத்து விசாரணை செய்து பின்பு 24.10.2021 அன்று மண்ணச்சநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.519/2021, இ.த.ச.பிரிவுகள் 294(பி), 506 Part I ன் கீழ் வழக்கு பதிவு செய்தார்.

3. (**அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பிறகு அன்றைய தினம் 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.2 ரவிச்சந்திரன் மற்றும் சுப்ரமணி முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

**4.** பிறகு அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தார். பிறகு அன்றைய தினமே எதிரியை நொச்சியம் கொள்ளிடம் ஆற்றங்கரை அருகில் கைது செய்து நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தினார். பிறகு தனது புலன் விசாரணையை முடித்துக்கொண்டு எதிரி மீது

இ.த.ச.பிரிவுகள் 294(பி), 506 Part I ன் கீழ் கனம் நீதிமன்றத்தில் 25.10.2021ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் புகார்தாரர் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

2. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்திலேயே வைத்து தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

Taken over by me in open court read over of the witness and admitted by the witness to be correct

(Sd/−K.R.Balaji)
Judicial Magistrate III,
Tiruchirappalli.